தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் ‘திராவிட மாடல்’ அரசின் சாதனை!

# தனிநபர் வருமானத்தில் தமிழ்நாடு இந்தியாவிலேயே இரண்டாவது இடம்!

## புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகப் புள்ளி விவரங்கள்படி, மக்களவையில் ஒன்றிய நிதித்துறை இணையமைச்சர் அறிவிப்பு!

புதுடெல்லி, ஜூலை 24-

ஒன்றிய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் அறிவித்தபடி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசு 2024-2025-ஆம் ஆண்டில் 9.69 சதவிகித பொருளாதார வளர்ச்சி வீதத்துடன் இந்தியாவிலேயே மிக அதிக வளர்ச்சியை பெற்று மாபெரும் சாதனை படைத்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாடு அடைந்துள்ள மிக உயர்ந்த வளர்ச்சி வீதம் இது என பாராட்டப்படுகிறது.

இந்தியாவிலேயே முதல மாநிலமாகத் தமிழ்நாடு இந்தச் சாதனையை நிகழ்த்தி யுள்ளதற்கு முதலமைச்சர் மு.கஸ்டாலின் அவர்கள் 2021-இல் பொறுப்பேற்றது முதல் அறிமுகப்படுத்தி நிறைவேற்றிவரும் புதுமையான திட்டங்கள்தான் காரணம்:-

700 கோடி பயண நடைகளுக்கு மேல் மகளிர் பயன்பெறும் கட்டணமில்லா விடியல் பயணத் திட்டம் !

4.95 இலட்சம் கல்லூரி மாணவியர்க்கு மாதம் ரூ.1,000 வழங்கும் புதுமைப் பெண் திட்டம்!

அதேபோல 3.28 இலட்சம் மாணவர்களுக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் தமிழ்ப் புதல்வன் திட்டம் !

1.15 கோடி இல்லத்தரசிகளுக்கு மாதம் ரூ.1,000 அள்ளி வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் !

4 கோடி மக்களுக்கு மேல் தொற்றா நோய்களுக்கு மருத்துவம் வசதி, ஐ.நா. அமைப்பு பாராட்டிய மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் !

ரூ.660 கோடியில் 95.97 இலட்சம் குழந்தைகள் பயன் பெறும் இல்லம் தேடி கல்வித் திட்டம் !

2 இலட்சத்திற்கு மேலான ஏழை, எளியோர் வீடு கட்ட தலா ரூ.3.50 இலட்சம் வழங்கும் கலைஞர் கனவு இல்லம் திட்டம்!

ரூ.648.12 கோடியில் 10,96,289 உயிர்களைக் காத்துள்ள இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும் 48 திட்டம்!

41 இலட்சம் மாணவர்கள் பயனடைந்து, 3,28,391 மாணவர்கள் முன்னணி நிறுவனங்களில் வேலைவாய்ப்புகள்பெற உதவியுள்ள நான்முதல்வன் திட்டம்!

895 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் குவிந்த 10,14,368கோடி முதலீடுகள் !

இவற்றின் வாயிலாகப் பெருகும் 32,04,895 வேலைவாய்ப்புகள் !

முதலிய திட்டங்களே இன்று பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாடு இந்தியாவில் முதலிடம்! - புதிய உச்சம் ! எனும் வெற்றிக்கு அடித்தளங்கள் .

இப்படி தமிழ்நாடு பொருளாதார வளர்ச்சியில் புதிய உச்சங்கள் அடைந்துவரும் வேளையில் மற்றும் ஒரு மணிமகுடத்தை ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்குச் சூட்டியுள்ளது. 21.7.2025 அன்று நாடாளுமன்றத்தில் மக்களவையில் ஒன்றிய நிதித்துறை இணையமைச்சர் பங்கஜ் சவுத்ரி அவர்கள் அளித்துள்ள பதிலில் தனிநபர் வருமானம் தேசிய அளவில் ரூ.1,14,710. இந்திய தேசிய சராசரி தனிநபர் வருமானத்தைவிட உயர்ந்து தமிழ்நாடு ரூ.1,96,309/- பெற்று இந்தியாவிலேயே இரண்டாவது இடம் என அறிவித்துள்ளார்.

2021ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு தொடர்ந்து அடைந்துவரும் வளர்ச்சிகள் சாதனைகள் ஆகியவற்றை எவராலும் மறைத்திட முடியாது. தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசு புதிய திட்டங்களை வழங்காத நிலையிலும் தமிழ்நாட்டிற்கு அளிக்கப்படவேண்டிய நிதிகளை அளிக்காத நிலையிலும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சிறந்த நிர்வாகத் திறன்களாலும், சீரிய தொலைநோக்குத் திட்டங்களாலும் தமிழ்நாடு தொடர்ந்து சாதனைகள் நிகழ்த்தி வருகிறது என்பதற்கு மற்றும் ஒரு சான்றுதான் நாடாளுமன்றத்தில் ஒன்றிய இணையமைச்சர் வெளியிட்டுள்ள அறிவிப்பாகும்.

---

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் திராவிட மாடல் ‘2.o’ ஆட்சி மீண்டும் அமையப் போவது உறுதி!

# எதிரிகளின் பயமே நமது வெற்றி!

## ‘ஓரணியில் தமிழ்நாடு’ கழக உறுப்பினர் சேர்க்கைக் குறித்து – கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிக்கை!



சென்னை, ஜூலை 24-

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

தமிழ்நாட்டின் மண் மொழி மானம் காத்திடும் பொருட்டு ஓரணியில் தமிழ்நாடு பரப்புரையை முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் ஜூலை 1 ஆம் தேதி தொடங்கி வைத்தார். அவர் தொடங்கி வைத்த நாள் முதல் ஒன்றிய பா.ஜ.க. அரசின் வஞ்சக சூழ்ச்சியையும், அடிமை அ.தி.மு.க. வின் துரோகங்களையும் கண்டு வெறுத்துப் போய் இருக்கும் தமிழ்நாட்டு மக்கள் முதல்வர் பின்னால் ‘ஓரணியில் தமிழ்நாடு’ என அணி அணியாய் அணிவகுத்து நிற்கத் தொடங்கினர். அதோடு எல்லார்க்கும் எல்லாம் என்ற உயரிய நோக்கோடு திராவிட மாடல் அரசின் நலத்திட்டங்கள் சென்று சேராத குடும்பங்களே கிடையாது என்ற அளவிற்கு முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு குடும்பத்தை யும் பார்த்து பார்த்துக் கவனித்து வருவதால் தமிழ்நாட்டு மக்கள் குடும்பம் குடும்பமாக கழகத்தில் இணைந்து வருகின்றனர்.

தமிழ்நாட்டின் அனைத்துத் தரப்பு மக்களும், அ.தி.மு.க. வினருமே கூட மாண்புமிகு முதலமைச்சர் பின்னால் அணிதிரள்வதைக் கண்டு தாங்க முடியாமல் அரண்டுபோய் அவதூறுகளைப் பரப்பி மக்களைக் குழப்ப பார்த்து அதில் தோற்றுப்போனதால் , நீதிமன்றத்திற்குச் சென்று ‘ஓரணியில் தமிழ்நாடு’பரப்புரையை எப்படியாவது தடுக்க முடியாதா என தவம் கிடந்தார் பழனிசாமி. நீதி மன்றத்தை நாடி தடைவாங்க முயன்ற அ.தி.மு.க.விற்கு மாண்பமை நீதி மன்றம் ‘ஓரணியில் தமிழ்நாடு’ உறுப்பினர் சேர்க்கைக்கு தடை விதிக்க முடியாது எனக் கூறி பழனிசாமி முகத்தில் கரியைப் பூசிவிட்டது. மேலும் OTP மட்டும் கேட்காமல் வழக்கம் போல உறுப்பினர் சேர்க்கையை மேற்கொள்ள அனுமதித்துள்ளது நீதிமன்றம். இப்படி கழக உறுப்பினர் சேர்க்கையை எப்படியாவது தடுக்க வேண்டும் என்ற பழனிசாமியின் பதட்டமே ஓரணியில் தமிழ்நாடு பரப்புரை எந்த அளவிற்கு மக்களிடம் சென்றுள்ளது என்பதை வெளிச்சம் போட்டு காட்டுகிறது.

கழக உறுப்பினர் சேர்க்கையைத் தடுக்க நினைத்த அதிமுக, பா.ஜ.க. வின் சதிச் செயலை நீதிமன்றமே முறியடித்த பின்னும், “சீப்பை ஒளித்து வைத்துவிட்டு கல்யாணத்தை நிறுத்தி விட்டோம்” என்ற வகையில் OTP பெறுவதை தடுத்து விட்டோம் என கூப்பாடு போடுகிறது அடிமைகள் கூட்டம். வேடிக்கை.!

திராவிட மாடல் அரசின் நலத்திட்டங்கள் மற்றும் சிறப்பான ஆட்சியை முன்வைத்து தன்னெழுச்சியாக பொது மக்கள் தங்களை கழக உறுப்பினராக இணைத்து வருகின்றனர். அதில் OTP பெறுவது என்பது உறுதிப்படுத்தலுக்கான ஒரு சிறு நடைமுறை மட்டுமே. எனினும் நீதிமன்ற வழிகாட்டலை மதித்து அந்த நடைமுறைக்கு மாற்றாக கீழ்க்காணும் நடமுறையை கடைப்பிடித்து உறுப்பினர் சேர்க்கையை மேற்கொள்ளுமாறு கழக உடன்பிறப்புகளுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

**புதிய வழிமுறைகள்:**

மக்களுடன் ஸ்டாலின் App ஐ அனைவரும் Update செய்து கொள்ளுங்கள்.

1) OTP கேட்கும் முறை தற்போது இல்லை.

2) அலைபேசி எண் கட்டாயம்.

3) தற்போதைக்கு, ஒரு குடும்பத்திற்கு ஒரு போன் நம்பரில் 1:4 என்ற அடிப்படையில் உறுப்பினர்களைச் சேர்க்கலாம்.

ஒரு குடும்பத்திற்கு ஒரு அலைபேசி எண் என்ற முறை வந்துள்ளது. ஆனால் வாய்ப்பு இருக்கும் இடங்களில் கிடைக்கின்ற அனைத்து அலைபேசி எண்களையும் பெற்றுக் கொள்ளவும்.

அலைபேசி எண் தவறாகவோ அல்லது அந்தக் குடும்பத்தில் இல்லாத நபரின் எண்ணாகவோ இருந்தால், உறுப்பினர் சேர்க்கை மேற்கொண்ட அனைத்துத் தரவுகளும் நீக்கப்பட்டு இப்பணியை மீண்டும் தொடக்கத்தில் இருந்து தொடங்கிட வேண்டும் என்பதால் பெறப்படும் அலைபேசி எண்ணின் உண்மைத்தன்மையை உறுதி செய்து கொள்வது அவசியம்.

அலைபேசி எண்ணைப் பதிவிட்டு சமர்ப்பித்தால் உறுப்பினர் சேர்க்கை முடிவடையும். அனைத்து வாக்காளர்களையும் சந்தித்து முழுமையாக கணக்கெடுப்புகளை முடிக்க வேண்டும்.

எதிரிகளின் பயமே நமது வெற்றி. 2026 லும் கழகத் தலைவர் அவர்களது தலைமையில் திராவிட மாடல் 2.o ஆட்சி அமைவது உறுதி.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

---

கடந்த அ.தி.மு.க. ஆட்சியின் வளர்ச்சியைக் காட்டிலும்

# தனிநபர் வருமானத்தில் இருமடங்கு மிஞ்சினோம்! தேசிய சராசரியை விஞ்சினோம்!

## அமைச்சர் தங்கம் தென்னரசு பதிவை மேற்கோள்காட்டி முதல்வர் சமூக வலைதளப்பதிவு!

சென்னை, ஜூலை 24 -

கடந்த அ.தி.மு.க. ஆட்சியின் வளர்ச்சியைக் காட்டிலும் தனிநபர் வருமானத்தில் இருமடங்கு மிஞ்சினோம்! தேசிய சராசரியை விஞ்சினோம்! என நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பதிவை மேற்கோள்காட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவு வெளியிட்டுள்ளார்.

அது வருமாறு :-

**தேசிய சராசரியை விஞ்சினோம்!**

**கடந்த அ.தி.மு.க. ஆட்சியின் வளர்ச்சியைக் காட்டிலும் இருமடங்கு மிஞ்சினோம்!**

**அடுத்து வரவுள்ள திராவிடமாடல் 2.0இல் முதல் மாநிலமாக உயருவோம்!** என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அமைச்சர் தங்கம் தென்னரசு பதிவை மேற்கோள்காட்டி சமூக வலைதளப் பதிவு வெளியிட்டுள்ளார்.

**நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு சமூக வலைதளப் பதிவு :**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில், தொழில்துறை, கல்வி, உட்கட்டமைப்பு மற்றும் சமூக நலனில் மாபெரும் சாதனைகளைப் படைத்து நாட்டிற்கே முன்னோடியாகத் திகழ்கிறது, தமிழ்நாடு. அந்தச் சாதனை பட்டியலில் மற்றுமொன்றாக, தமிழ்நாடு ரூ.1,96,309 என்ற தனிநபர் வருமான குறியீட்டின் மூலம் மாநிலங்களுக்கிடையே இரண்டாவது இடத்தை பிடித்துள்ளது. இந்தச் சாதனையானது, திராவிட மாடலின் தொலைநோக்கு திட்டங்கள், தொழில் வளர்ச்சி, முதலீடுகளை ஈர்க்கும் முயற்சிகள் மற்றும் மக்கள் நலத் திட்டங்களின் வெற்றியைப் பிரதி பலிக்கிறது. “எல்லார்க்கும் எல்லாம்” என்ற உன்னதக் கொள்கையோடு செயல்பட்டு வரும் நமது திராவிட மாடல் ஆட்சிக்குக் கிடைத்த அடுத்த மணிமகுடம் தான் இது.

கடந்த ஆட்சியின் இறுதியாண்டான 2020-21ல் தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் 1.43 இலட்சம் ரூபாய் மட்டுமே. நம் கழக ஆட்சியில், கடந்த நான்கு ஆண்டுகளில் சராசரியாக 8.15 சதவீதம் வளர்ச்சியோடு 2024-25 ஆம் ஆண்டில் தனி நபர் வருமானம் 1.96 இலட்சம் ரூபாயாக உயர்ந்துள்ளது. இதுவே கடந்த ஆட்சிக் காலத்தில், 2016-17 ஆம் ஆண்டு முதல் 2020-21 ஆம் ஆண்டு வரை 4.42 சதவீதம் மட்டுமே வளர்ச்சியடைந்துள்ளது. இத்தகைய உயரிய சராசரி வளர்ச்சியானது, வெற்றிகரமான திராவிட மாடல் ஆட்சிக்கு ஒரு சான்றாகும்.

தேசிய சராசரியுடன் ஒப்பிடுகையில் 2024-25 ஆம் ஆண்டில் தேசிய சராசரி தனிநபர் வருமானம் 1.14 இலட்சம் மட்டுமே. 2014-15 முதல் 2024-25 வரையிலான கடந்த பத்தாண்டு தேசிய சராசரி வளர்ச்சி விகிதம் 57 சதவீதம் மட்டுமே. ஆனால், அனைவரையும் வியக்க வைக்கும் வகையில், தமிழ்நாடு அடைந்துள்ள வளர்ச்சி விகிதமோ 83.3 சதவீதம் ஆகும். மக்கள் நலனை மையப்படுத்தி, பொருளாதார முன்னேற்றத்தில் மட்டும் முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் அரசு கவனம் செலுத்தியதால் இவை சாத்தியமானது. இதே உற்சாகத்தோடு 1 ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரத்தை நோக்கி அண்ணன் தளபதி அவர்களின் தலைமையில் இன்னும் வேகமாகப் பயணிப் போம்! - என அமைச்சர் பதிவிட்டுள்ளார்.

---

விலை வீழ்ச்சியால் மாம்பழ விவசாயிகள் கடும் பாதிப்பு

# ஒன்றிய அரசு உதவிக்கரம் நீட்டுமா?

## மக்களவையில் - டி.ஆர். பாலு கேள்வி!



புதுடெல்லி, ஜூலை 24-

நடப்பு ஆண்டு மாம்பழ விளைச்சல் அதிகமாக உள்ள நிலையில் விலையில் கடும் வீழ்ச்சியும் விற்பனையும் முழுமையாக இல்லாததால் உரிய லாபம் கிடைக்காமல் மாம்பழ விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் கிடைத்த விலைக்கு விற்கும் கட்டாயத்துக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இதனைக் கருத்தில் கொண்டு மாம்பழ விவசாயிகள் நலன் காக்க ஒன்றிய, மாநில அரசுகள் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன? இது போன்ற இன்னல்களை எதிர்கொள்ள மாம்பழ ஏற்றுமதி மை ஊக்குவிக்கவும் இன்ன பிற ஆதரவுகளை அளிக்கவும் மாங்கனி வாரியம் அமைக்கவும் அரசு முன்வருமா? என்று மக்களவையில் திமுக மக்களவைக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய இணை அமைச்சர் ராம்நாத் தாக்கூர் நாடாளுமன்ற மக்களவையில் அளித்த எழுத்துபூர்வ பதிலில் நடப்பு மாம்பழ பருவத்தில் மாம்பழங்கள் விளைச்சல் சென்ற ஆண்டை விட 5 லட்சம் டன் அதிகமாக, 228.37 லட்சம் டன் அளவில் உள்ளது. தென் மாநிலங்களில் மாம்பழ விளைச்சல் இந்த ஆண்டு அதிக மானதால் விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இது போன்ற சூழல்களில் மாம்பழ உற்பத்தியாளர்களுக்கு நிவாரணம் அளித்திட ஒன்றிய அரசின் “சந்தை இடையீடு திட்டம்” செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் விருப்பப்படும் மாநில அரசு உபரியாக உள்ள மாம்பழத்தை கொள்முதல் செய்து விவசாயிகளின் இழப்பை சரி செய்யலாம். இதனால் ஏற்படும் நஷ்டத்தில் 50 விழுக்காடு வரை மாநில அரசுகள் ஏற்க முன்வர வேண்டும்.

மாம்பழ விளைச்சலை அதிகரிக்கவும் அதற்கு தக்க உத்திகள் தொடர்பான அறிவுரைகளையும் மாம்பழ விவசாயிகளுக்கு இந்திய வேளாண் ஆராய்ச்சி மையம் வழங்கி வருகிறது. மேலும், ஏற்றுமதி தொடர்பான உட்கட்டமைப்பு, பதப்படுத்தல் போன்றவைக்கு ஒன்றிய அரசின் வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்கள் மாம்பழ விவசாயிகளுக்கு ஏற்றுமதிக்கு தேவையான உரிய உதவிகளை அளிக்கின்றன.

இவ்வாறு ஒன்றிய வேளாண் இணை அமைச்சர் தனது பதிலில் தெரிவித்தார். மாங்கனி வாரியம் அமைப்பது குறித்து எந்த தகவலையும் அமைச்சர் தனது பதிலில் கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

---

விமான விபத்துகளைத் தவிர்க்க

# விமானங்களுக்கு பாதுகாப்பு தணிக்கைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதா?

## மாநிலங்களவையில் – கழக உறுப்பினர் மு.சண்முகம் கேள்வி.



புதுடெல்லி, ஜூலை 24-

மாநிலங்களவையில் கழக உறுப்பினர் மு.சண்முகம் அவர்கள் 21.07.2025 அன்று சமீபத்திய விமான விபத்து குறித்து எழுத்துப்பூர்வமாக கேள்வி எழுப்பியிருந்தார்.

(அ) சமீபத்திய அகமதாபாத் விமான விபத்து குறித்து ஏதேனும் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதா, அப்படியானால், ஏதேனும் முதற்கட்ட அறிக்கை வெளிவந்துள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள்;

(ஆ) இறந்த அனைத்து விமானப் பயணிகளின் டி.என்.ஏ. மாதிரிகள் அடையாளம் காணப்பட்டு, விவரங்களுடன் அவர்களின் உறவினர்களிடம் உடல்கள் ஒப்படைக்கப்பட்டதா;

(இ) இறந்தவரின் சட்டப்பூர்வ வாரிசுகளுக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகையின் விவரங்கள்;

(ஈ) இதுபோன்ற துயர விபத்துகளைத் தவிர்க்க, நாட்டில் உள்ள அனைத்து விமான நிறுவனங்களின் அனைத்து பயணிகள் விமானங்களுக்கும் ஏதேனும் பாதுகாப்பு தணிக்கை உத்தரவிடப்பட்டுள்ளதா, அப்படியானால், விவரங்கள்; மற்றும்

(இ) இல்லையென்றால், அதற்கான காரணங்கள்? என்ன?

இந்தக் கேள்விகளுக்கு ஒன்றிய அரசின் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகத்தின் இணையமைச்சர் ஸ்ரீமுரளிதர் மஹோல் அளித்த பதில் வருமாறு

(a): 12.06.2025 அன்று அகமதாபாத்தில் நடந்த ஏர் இந்தியா விமானம் AI171 விபத்துக்கு வழிவகுத்த சாத்தியமான காரணங்கள் / பங்கு காரணிகளை தீர்மானிக்க, விமான விபத்து புலனாய்வுப் பணியகம் (AAIB) விமானத்தின் (விபத்துக்கள் மற்றும் சம்பவங்கள் விசாரணை) விதிகள், 2017 இன் விதி 11இன் கீழ் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.

விபத்து குறித்த முதற்கட்ட அறிக்கையை விமான விபத்து புலனாய்வுப் பணியகம் (AAIB) ஜூலை 12, 2025 அன்று வெளியிட்டுள்ளது அது அவர்களின் வலைத்தளமான www.aaib.gov.in இல் கிடைக்கிறது.

b): விபத்தில் 260 பேர் இறந்தனர், 241 பேர் விமானத்தில் இருந்தனர். 19 பேர் தரையில் இருந்தனர். 241 பேரின் டி.என்.ஏ. மாதிரிகள் அவர்களது உறவினர்களுடன் பொருத்தப்பட்டு, உடல்கள் அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. மீதமுள்ள 19 பேரில், 8 பேரின் டி.என்.ஏ. பொருத்தம் மூலம் அடையாளம் காணப்பட்டன, மேலும் 11 பேர் உடல் ரீதியாக அடையாளம் காணப்பட்டு அவர்களது உறவினர்களிடம் உடல்கள் ஒப்படைக்கப்பட்டன.

c): ஜூலை 15, 2025 நிலவரப்படி, இறந்த 114 நபர்களின் நெருங்கிய உறவினர்களுக்கு ரூ. 25 லட்சம் இடைக்கால இழப்பீடாக (இறுதி இழப்பீட்டுத் தொகையில் சரிசெய்யப்பட வேண்டும்) விடுவித்துள்ளதாக ஏர் இந்தியா தெரிவித்துள்ளது. மீதமுள்ள இறந்தவர்களுக்கு, இடைக்கால இழப்பீடு வழங்குவது, உறவினர்களின் மூலம் ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கான பல்வேறு கட்டங்களில் உள்ளது. இடைக்கால இழப்பீடு வழங்கப்பட்ட பிறகு இறுதி இழப்பீட்டிற்கான செயல்முறை தொடங்கப்படும்.

இறந்தவரின் நெருங்கிய உறவினர்களுக்கு (NoK) தலா ரூ. 1 கோடி தன்னார்வ இழப்பீடு வழங்குவதாக டாடா சன்ஸ் அறிவித்துள்ளதாகவும், டாடா சன்ஸ் ஒரு தொடர்புடைய அறக்கட்டளையை அமைக்கும் பணிகள் முடிந்தவுடன் இது தொடங்கப்படும் என்றும், இதன் மூலம் இந்த பணம் செலுத்தப்படும் என்றும் ஏர் இந்தியா தெரிவித்துள்ளது. மேலும், இறந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு பயண ஏற்பாடுகள், தங்குமிடம், மருத்துவச் செலவுகள், காயமடைந்த தினசரி ஊதியம் பெறுபவர்களுக்கு உடனடி ரொக்கப் பணம் போன்ற பல்வேறு வழிகளில் ஏர் இந்தியா உதவி வருகிறது.

2009ஆம் ஆண்டு 1972 ஆம் ஆண்டு விமானப் போக்குவரத்துச் சட்டத்தில் திருத்தங்களைச் செய்வதன் மூலம் இந்தியா 1999 ஆம் ஆண்டு மாண்ட்ரீல் மாநாட்டை அங்கீகரித்துள்ளது. இந்த சட்டமானது, சர்வதேசப் போக்குவரத்துக்கான நபர்கள், சாமான்கள் அல்லது சரக்குகளுக்கு மரணம், தாமதம், சேதம் அல்லது இழப்பு ஏற்பட்டால் இழப்பீடு வழங்குவதற்கான கேரியர்களின் பொறுப்புகளை வழங்குகிறது.

ஈ) & (இ): விமானத்தின் பாதுகாப்பான இயக்கம் மற்றும் அதன் பராமரிப்புக்கான விரிவான மற்றும் கட்டமைக்கப்பட்ட சிவில் விமானப் போக்குவரத்து விதிமுறைகளை சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகம் (டிஜிசிஏ) கொண்டுள்ளது. இந்த விதிமுறைகள் தொடர்ந்து புதுப்பிக்கப்பட்டு சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பு (ஐசிஏஓ) / ஐரோப்பிய ஒன்றிய விமானப் பாதுகாப்பு ஏஜென்சி (ஈஏஎஸ்ஏ) தரநிலைகளுடன் சீரமைக்கப்படுகின்றன.

மேலும், ஜூன் 19, 2025 அன்று DGCA பொது பாதுகாப்பு சுற்றறிக்கை 01/2025 ஐ வெளியிட்டுள்ளது, இது விமான சுற்றுச்சூழல் அமைப்பை மதிப்பிடுவதற்கும் விமானப் பாதுகாப்பு கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கும் விரிவான சிறப்பு தணிக்கையைக் கையாள்கிறது.

இவ்வாறு அந்த பதிலில் தெரிவித்துள்ளார்.